# பரீட்சகரின் அறிக்கை

**AA1 பரீட்சை – 2016 யூலை**

# (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

---

*அதிகமான பரீட்சார்த்திகள் வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல் பாட வினாப்பத் திரத்திற்கு வெற்றிகரமாக முகங்கொடுத்திருந்தனர். எவ்வாறாயினும், குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் ஆற்றல்சார் மட்டத்தினை அடையாதிருந்ததுடன் அதற்கான பொதுவான காரணங்களாக பின்வருவன அடையாளங்காணப்பட்டிருந்தன.*

## பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01** – இவ்வினா 40 புள்ளிகளுக்காக 20 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது.

இவ்வினா நியாயமானளவு பாடத்திட்டம் முழுவதையும் உள்ளடக்கிய வகையிலும், மாணவர்கள் பாடத்திட்டம் தொடர்பிலான அவர்களது அறிவைப் பயன்படுத்தி உயர்ந்தபட்சப் புள்ளிகளைப் பெறக்கூடிய வகையிலும் கட்டமைக்கப்பட்டிருந்தது.

மொத்தத்தில் இவ்வினாக்களுக்கான அதிகளவு பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டம் திருப்திகரமாக அமைந்திருந்தது. இவ்வினாக்கள் தரப்பட்ட விடைகளிலிருந்து மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல், கணிப்பீடுகள் மற்றும் பொது அறிவுடன் தொடர்புடைய வினாக்கள் என பல்வேறு வகை வினாக்களை உள்ளடக்கியிருந்தது. வினாக்களின் பலதரப்பட்ட வகைகளுக்கும் விடையளிப் பதற்குப் பரீட்சார்த்திகள் தவறியிந்தமை அடையாளங்காணப்பட்டது. அதற்கிணங்க, பரீட்சகர்களால் அவதானிக்கப்பட்ட பின்வரும் பலவீனங்கள் காணப்பட்டன.

**<u>வினா இல. 1.5</u>**

வரிகள் தொடர்பான போதுமானளவு அறிவு இல்லாததன் காரணமாக இவ்வினாவுக்கான சரியான விடையினைக் காண்பதில் பரீட்சார்த்திகள் தவறியிருந்தனர்.

**<u>வினா இல. 1.7</u>**

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் 2015 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 7.5% என பிழையாக விளங்கிக்கொண்டிருந்தனர்.

**<u>வினா இல. 1.10</u>**

இவ்வினாவில் நயவிணக்கம் தொடர்பான புரிந்துணர்வை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் பரீட்சார்த் திகள் அடைந்திருக்கவில்லை என்பதைக் காணக்கூடியதாக இருந்தது. இப்பதம் பரீட்சார்த்திகளால் சரியாக விளங்கிக்கொள்ளப்படவில்லை.

**<u>வினா இல. 1.18</u>**

சில பரீட்சார்த்திகள் GDP தொடர்பில் அது பெரளவிலானதா அல்லது மெய்யானதா என்தைக் குறிப்பிடாது பூரணமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

**<u>வினா இல. 1.19</u>**

இங்கு, பண நிரம்பல் மற்றும் பணவியல் அடிப்படை ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடு விளங்கிக்கொள்ளப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் ‘‘குறுகிய’’ என்பதைத் தவிர்த்துவிட்டு பண நிரம்பல் என பூரணமற்ற விடையினை வழங்கியிருந்தனர்.

**<u>வினா இல. 1.20</u>**

சில பரீட்சார்த்திகள் ‘‘விசால’’ என்பது போன்ற பூரணமற்ற விடைகளை எழுதியிருந்தனர். இது புள்ளிகளைப் பெறுவதற்கு போதுமானதாக இருக்கவில்லை. புள்ளிகளைப் பெறுவதற்கு விடையானது விசால பணப் பெருக்கியா அல்லது விசால பண நிரம்பலா என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

சில பரீட்சார்த்திகள் வினா இலக்கங்கள் 1.19 மற்றும் 1.20 ஆகியவற்றுக்கான விடைகளை மாற்றி எழுதியிருந்தனர்.

மொத்தத்தில் பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர்.

## <u>பகுதி B</u>

இப்பகுதி ஒவ்வொன்றும் பத்து (10) புள்ளிகளைக் கொண்ட 04 வினாக்களை உள்ளடக்கியிருந்தது.

### வினா இல. 02

**(a)** பல பரீட்சார்த்திகள் இலங்கையின் பொருளாதார முறைமை ‘‘கலப்புப் பொருளாதாரம்’’ எனச் சரியாக அடையாளங்கண்டிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் இலங்கையின் பொருளாதார முறைமை பற்றிய தெளிவான விளக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் அப்பொருளாதார முறைமையைக் கொண்டிருப்பதற்கான காரணங்களை அடையாளங்காண்பதற்கான இயலுமை அற்றவர்களாகக் காணப்பட்டனர்.

**(b)** குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இலங்கையின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை அடையாளங்கண்டிருந்ததுடன் அதனை வெற்றிகரமாக விளக்கியுமிருந்தனர். ஆயினும், சில பரீட்சார்த்திகள் பொருளாதாரமொன்றின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றிய அடிப்படை அறிவைக்கூடப் பெற்றிருக்கவில்லை. அவர்கள் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குப் பதிலாக அருமந்ததன்மை மற்றும் சந்தர்ப்பச் செலவு போன்ற எண்ணக்கருக்களை விளக்கியிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் கொள்வனவு அதிகாரத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு பிரச்சினையான ‘‘யாருக்காகச் சமர்ப்பிப்பதற்கு (For Whom to Produce)’’ என்ற அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையை அடையாளங்கண்டிருக்கவில்லை. அவர்கள் இதற்காக, பிள்ளைகளுக்கான / வயதுவந்தவர்களுக்கான என்றவாறு பிழையாக விளக்கியிருந்தனர்.

### வினா இல. 03

**(a)** ‘‘ஒட்டுமொத்த அரசாங்கப் பாதீட்டின் பற்றாக்குறை’’ என்பது பற்றிய அறிவும் அரசாங்கப் பாதீட்டுப் பற்றாக்குறைக்கான நிதியீட்டல் மூலங்கள் பற்றிய அறிவும் (i) மற்றும் (ii) இன் மூலம் பரீட்சிக்கப்பட்டது.

(i) பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஒட்டுமொத்த அரசாங்கப் பாதீட்டின் பற்றாக்குறை பற்றிய இவ்வினாவை எதிர்கொள்வதற்குத் தவறியிருந்தனர்.

(ii) பெரும்பாலான பரீட்சார்த்திகள் அரசாங்கப் பாதீட்டுப் பற்றாக்குறைக்கான நிதியீட்டல் மூலங்களைச் சரியாகக் குறிப்பிட்டிருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் நேரில் வரிகள், மானியங்கள், நீதிமன்றங்களால் விதிக்கப்படும் அபராதங்கள் போன்ற சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**(b)** இங்கு அரசதுறை முயற்சிகளின் (Public Enterprises) அனுகூலங்கள் நான்கினை (04) குறிப்பிடுமாறு கோரப்பட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் மட்டுமே இவ்வினாவைச் சரியாக விளங்கிக்கொண்டிருந்தனர். பல பரீட்சார்த்திகள் தொழில்முயற்சியின் (entrepreneurship) அனுகூலங்களை எழுதியிருந்தனர். வேறு சில பரீட்சார்த்திகள் அரசதுறை முயற்சிகளைக் கருதுவதற்குப் பதிலாக அரச சேவைகளைக் கருதியிருந்ததுடன், அரச சேவையின் நிரந்தரத் தன்மை, ஓய்வூதிய சேவை, தொழில் பாதுகாப்பு போன்ற பிழையானதும் சம்பந்தமற்றதுமான விடைகளை எழுதியிருந்தனர்.

## வினா இல. 04

**(a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் பணத்தின் தொழிற்பாடுகளைச் சரியாகக் குறிப்பிட்டிருந்ததுடன் அவற்றை விளக்கியுமிருந்தனர். இதன் பேறாக பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

ஆனால் சில பரீட்சார்த்திகள் விடையளிக்கும்போது பின்வரும் குறைபாடுகளை கொண்டிருந்தனர்.

- பணத்தின் தொழிற்பாடுகளை மாத்திரம் எழுதியிருந்தனர். அவற்றை விபரிக்கவில்லை.
- குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் பணத்தின் பரிணாமம், இலத்திரனியல் பணம், பணத்தின் பண்பியல்புகள் போன்ற சம்பந்தமற்ற விடயங்களைத் தந்திருந்தனர்.
- விடையளிக்கும்போது பணத்தின் ஒரு தொழிற்பாடான கணக்கின் அலகு / பெறுமதியின் அளவீட்டினை வெளிநாட்டு நாணயமாற்றுடன் குழப்பியடித்திருந்தனர்.
- பணத்தின் தொழிற்பாடுகளுக்குப் பதிலாக விலையின் தொழிற்பாடுகள் எழுதப்பட்டிருந்தன.

**(b)** இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்த பரீட்சார்த்திகள் வணிக வங்கியொன்றின் நான்கு (04) பிரதான தொழிற்பாடுகளை எடுத்துக்காட்டியிருந்தனர்.

மொத்தத்தில், இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளிக்கத் தவறிய சில பரீட்சார்த்திகளின் விடைகளிலிருந்து அவதானிக்கப்பட்ட சில பலவீனங்கள் கீழ்வருமாறு :

- சில பரீட்சார்த்திகள் மத்திய வங்கியின் தொழிற்பாடுகளை எழுதியிருந்தனர்.
- பல பரீட்சார்த்திகள் கவரும் கேள்வி வைப்புகள், கால / நிலையான மற்றும் சேமிப்பு வைப்புகளை வெவ்வேறான தொழிற்பாடுகளாக எழுதியிருந்தனர்.

## வினா இல. 05

**(a)** இந்தப் பகுதியில் சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புபட்ட ‘‘வர்த்தக மாற்றுவீதம்’’ என்னும் பதத்தினை விளக்குமாறு கோரப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இதற்குக் குறைவான புள்ளிகளையே பெற்றிருந்தனர். ஆங்கில மொழிமூலத்தில் விடையெழுதிய மாணவர்கள் ‘‘வர்த்தக மாற்றுவீதம்’’ என்பதை சர்வதேச வர்த்தகத்திற்கு ஏற்புடையதான

நிபந்தனைகளாக கருதிக் குழம்பியிருந்தனர். பல மாணவர்கள் இறக்குமதிக்கான செலவினத்திற்கும் ஏற்றுமதியிலிருந்தான வருமானத்திற்குமிடையிலான வேறுபாடு, ஏற்றுமதிகளிலிருந்தான வருமானத்திற்கும் இறக்குமதிகளுக்கான செலவினத்திற்குமிடையிலான குறைபாடு போன்ற சம்பந்தமற்ற விடைகளைத் தந்திருந்தனர்.

**(b)** (i) இங்கு ''பொருளாதார வளர்ச்சி'' என்பதன் கருத்தை விபரிக்குமாறு கோரப்பட்டதுடன் பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இதற்கு வெற்றிகரமாக விடையளிக்கப்பட்டிருந்தது. ஆயினும் பல பரீட்சார்த்திகள் தங்களுடைய விபரிப்பில் ''பொருளாதார வளர்ச்சி'' க்காகப் போதுமானளவு பொருள் வரையறையினை உள்ளடக்கியிருக்கவில்லை.

**உதாரணம்** : ''மெய் GDP'', ''காலப்பகுதிக்கு மேலாக அதிகரித்தல்'' போன்ற பிரதான சொற்பதங்கள் உள்ளடக்கப்படவில்லை.

(ii) பெரும்பாலான பரீட்சார்த்திகள் பொருளாதார வளர்ச்சியின் நன்மைகளைக் குறிப்பிடுமாறு கோரப்பட்ட வினாவின் இவ்வுப பகுதிக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர்.

## <u>பகுதி C</u>

**வினா இல. 06** – இது 20 புள்ளிகளுக்கான ஒரு கட்டாய வினாவாகும்.

<u>பகுதி A</u>

**(a)** இங்கு சந்தைக் கட்டமைப்புகள் மீதான அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் தனியுரிமையின் ஐந்து (05) பிரதான பண்பியல்புகளைக் குறிப்பிடுமாறும் கேட்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

- நிறைபோட்டியின் பண்பியல்புகள் குறிப்பிடப்பட்டிருத்தல்
- தனியுரிமை மற்றும் நிறைபோட்டி ஆகிய இரண்டினதும் பண்பியல்புகள் குறிப்பிடப் பட்டிருத்தல்

**(b)** குறுங்கால ஓட்டத்தில் தனியுரிமை நிறுவனமொன்று எவ்வாறு தனது இலாபத்தினை உச்சப்படுத்துகிறது என்பதை வரைபட உதவியுடன் விபரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இது தொடர்பில் தெளிவான விளக்கத்தைக் கொண்டிருக்க வில்லை என்பது பின்வரும் குறைபாடுகள் மற்றும் அளிக்கப்பட்டிருந்த பல பிழையான விடைகள் ஆகியவற்றிலிருந்து அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

- வரைபடத்தைச் சரியாக வரையாதிருந்தமை
- அச்சுகள் பெயரிடப்படாமை
- வினாவில் கேட்கப்பட்டதற்கிணங்க வரைபடத்தில் உச்ச இலாபத்தைக் காட்டாமை
- சரியான முறையில் வரைபினை விபரிக்காமை
- தனியுரிமை நிறுவனம் ஒன்றிற்குப் பதிலாக நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் இலாப உச்சப்படுத்தலுக்கான வரைபடத்தை வரைந்திருந்தமை

**<u>பகுதி B</u>**

இங்கு தேசிய கணக்குகள் தொடர்பான கோட்பாட்டுரீதியானதும் செய்முறைரீதியானதுமான அறிவு பரீட்சிக்கப்பட்டது.

**(a)** மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் மொத்த தேசிய உற்பத்தி (GNP) ஆகியவற்றை வேறுபடுத்துவது தொடர்பிலான அறிவு பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் வேறுபாட்டைச் சரியாக விபரிப்பதில் தவறியிருந்தனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

- மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் மொத்த தேசிய உற்பத்தி ஆகியவற்றைச் சரியாக வரையறுக்காமை
- வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகரக் காரணி வருமானம் பற்றிய தெளிவினைக் கொண்டிருக்காமை

**(b)** தேசிய கணக்குகளின் செய்முறைப் பிரயோகம் பரீட்சிக்கப்பட்டது. தரப்பட்ட உத்தேசத் தரவுகளிலிருந்து மொத்தத் தேசிய உற்பத்தியினை (GNP) கணிப்பிடுமாறு கோரப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் கணிப்பீட்டைச் சரியாகச் செய்திருந்தனர். எவ்வாறாயினும், காரணிக் கிரய விலைகளை சந்தை விலைகளுக்கு மாற்றுவது தொடர்பில் போதிய அறிவு காணப்படாமையானது விடப்பட்டிருந்த மிகவும் பொதுவான பிழையாக அவதானிக்கப்பட்டது.

\- - -

**பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள் :**

1. பாடத்திட்டத்தை முழுமையாகக் கற்றுத் தெளிவதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தையும் செலுத்தவும்.
2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.
3. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.
4. விசேடமாகச் சுய கற்றல் உரைகள், புத்தகங்கள், கையேடுகள், கடிதங்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி வருடாந்த அறிக்கைகள் மற்றும் பாடத்துடன் தொடர்புபட்ட ஏனையவைகளை கற்கவும்.
5. வரைபடங்களைச் சரியாகப் பெயரிட்டு விபரிக்கவும்.

6. விடையெழுதும்போது அடிப்படை கோட்பாட்டுரீதியான எண்ணக்கருக்களைச் சரியாக இனங் காண்பதற்கும் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களைக் கட்டியெழுப்பவும்.

7. கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் உரிய இடங்களில் ஏற்றவாறு இடப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

8. வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

9. கடந்தகால வினாப்பத்திரங்களையும் விடைகளையும் கற்பதன் மூலம் உங்களது அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

10. பொருளியல் கோட்பாடுகளைச் சரியாக விளங்கிக்கொள்வதன் மூலம் அதனுடன் தொடர் புடையவைகளுக்கு இடையிலான வேறுபாடுகளைக் கட்டமைப்பதற்கு இயலுமாக இருத்தல் வேண்டும்.

11. நேர முகாமைத்துவம் முக்கியமானது.

12. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் சரியான இடங்களில் எழுதப் பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

13. முன்னாயத்தத்துடனும் இயலுமான புள்ளிகளைப் பெறுகின்ற எதிர்பார்ப்பிலும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -